# உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச் செய்வது எப்படி?

தேர்தல் தினத்தன்று உங்களுக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் தரப்படும். **பச்சை** நிறத்திலானது பிரதிநிதிகள் சபைக்குரியது, **வெள்ளை** நிறத்திலானது 'ஸெனட்'டிற்குரியது.

## பிரதிநிதிகள் சபை

**பச்சை நிற வாக்குச் சீட்டில்** உங்கள் முதல் விருப்புக்குரிய வேட்பாளருக்கருகில் '1' என்றும் இரண்டாம் விருப்புக்குரிய வேட்பாளருக்கருகில் '2' என்றும், இவ்வாறாக அனைத்துப் பெட்டிகளிலும் இலக்கமிட வேண்டும்.

உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்பட நீங்கள் **அனைத்துப் பெட்டிகளிலும்** இலக்கமிடுவது அவசியம்.




மாதிரி வாக்குச் சீட்டு

## ஸெனட்

**வெள்ளை நிற வாக்குச் சீட்டில்** கோட்டிற்கு மேல் அல்லது கோட்டிற்குக் கீழ் நீங்கள் வாக்களிக்கத் தெரிவு செய்யலாம்.




### ஏதாவது ஒன்றில் கோட்டிற்கு மேல்

கோட்டிற்கு மேல் நீங்கள் வாக்களிப்பதாயின் **குறைந்தது 6 பெட்டிகளிலேனும்** 1 இலிருந்து 6 வரை நீங்கள் இலக்கமிட வேண்டும்.

உங்கள் விருப்பத்தெரிவிற்குரிய கட்சிக்கு அல்லது குழுவிற்குரிய பெட்டியில் '1' என்றும் இரண்டாம் விருப்புக்குரிய கட்சிக்கு அல்லது குழுவிற்குரிய பெட்டியில் '2' என்றும், இவ்வாறாகக் குறைந்தது 6 பெட்டிகளிலேனும் நீங்கள் இலக்கமிட வேண்டும். கோட்டிற்கு மேலே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.




மாதிரி வாக்குச் சீட்டுகள்

### அல்லது கோட்டிற்கு

கோட்டிற்குக் கீழே நீங்கள் வாக்களிப்பதாயின் **குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** 1 இலிருந்து 12 வரை நீங்கள் இலக்கமிட வேண்டும்.

உங்கள் விருப்பத்தெரிவிற்குரிய வேட்பாளருக்கருகிலுள்ள பெட்டியில் '1' என்றும் இரண்டாம் விருப்புக்குரிய வேட்பாளருக்கருகிலுள்ள பெட்டியில் '2' என்றும், இவ்வாறாகக் குறைந்தது 12 பெட்டிகளிலேனும் நீங்கள் இலக்கமிட வேண்டும். கோட்டிற்கு மேலே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.

**நீங்கள் ஏதும் தவறிழைத்தால் கவலைப்பட வேண்டியதில்லை.**
இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.



Authorised by the Electoral Commissioner, Canberra